**O.S.No.115/2020 நாள் 11.06.2026 DW3 – திரு.ஆத்திமுத்து**

(சாட்சி மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.)

**குறுக்குவிசாரணை(வாதி தரப்பில்)**

எனக்கு எந்த ஊர் என்றால் பெரியநாயகபுரம். ஆத்தி எனக்கு என்ன உறவு என்றால் உள்ளூருக்குள் மாமா உறவு முறை வேண்டும். எனது அத்தை ஆழ்வாரம்மாளை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அவர் தற்போது எங்கு உள்ளார் என்றால் அவர்களது வீட்டில் முன்னால் வசித்து வருகிறார். மாமியாரும் மருமகளும் பேசிக்கொள்ளமாட்டார்கள் என்றால் சரிதான். உயில் எழுதியதாக சொல்லும் காலகட்டத்திலும் மாமியாரும் மருமகளும் பேசிக்கொள்ளமாட்டார்கள் என்றால் சரிதான். மருமகள் சொல்லிதான் ஆத்தி உயில் எழுத வந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. உயில் ஆவணம் எங்கு வைத்து யாரால் எழுதப்பட்டது என்று தெரியுமா என்றால் சிதம்பரநகரில் வைத்து கனகசுந்தரம் என்பவரால் எழுதப்பட்டது. ஆழ்வாரம்மாள் தற்போது மகள்களின் பராமரிப்பில் தான் உள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. ஆனால் உள்ளூரில் எந்த மகள்களும் இல்லை. பெரியநாச்சி வீடு எனது வீட்டிற்கு எத்தனை வீடு தள்ளி உள்ளது என்றால் தற்போது பெரியநாச்சி எங்கள் ஊரில் இல்லை சுமார் 1 வருடமாக ஊரில் இல்லை. அவர் நான் வசிக்கும் தெருவிலே தான் வசித்து வருகிறார் என்றும் ஆத்தியின் மருமகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வரும் என்றும் சாட்சியம் அளிக் கவேண்டும் என்றும் பெரியராஜ் என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை. நான் சாட்சியம் அளிப்பதற்கு முன்பு பெரியராஜ் என்னை பார்த்தாரா என்றால் இல்லை. பெரியராஜ் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எழுதி வைத்த பத்திரத்தில் தான் நான் கையெழுத்து செய்தேன் என்றால் ஆத்தி முதலில் கையெழுத்து செய்தார் பிறகு நான் கையெழுத்து செய்தேன். வேறுயாரும் கையெழுத்து செய்யவில்லையா என்றால் ஜெபராஜ் கையெழுத்து செய்தார்.

ஆனால் அவர் தற்போது உயிரோடு இல்லை. ஜெபராஜ் உயிரோடு இல்லை என்பது எப்படி தெரியும் என்றால் உள்ளூர் என்பதால் தெரியும். ஆத்திக்கு நிறைய உறவினர்கள் உள்ள நிலையில் என்னை எதற்காக அழைத்து சென்றார் என்றால் நன்கு பழக்கம் என்பதால் அழைத்து சென்றார். நான் ஆத்தியுடன் நன்கு பழக்கம் என்பதால் சாட்சியாக இருக்கும்படி அழைத்து சென்றார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவர் யாருக்கு என்ன உரிமை ஏற்படுத்தி உள்ளார் என்றால் தெரியும். உயில் பத்திரத்தை நான் வாசித்து பார்த்துள்ளேனா என்றால்இல்லை. உயில் எழுதிய விபரம் எனக்கு தெரியாது என்றாலும் பத்திர அலுவலகத்தில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல. உயில் விபரங்கள் தெரியாது என்றாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிளேன் என்றாலும் சரியல்ல. ஆத்தி உண்மையிலேயே உயில் எழுதியிருந்தால் அவரது மனைவிக்கு ஏதாவது ஏற்பாடு செய்ருப்பார் என்றால் அவரது குடும்ப விவரங்கள் பற்றி எனக்கு தெரியாது. ஆத்தியின் மகன் இறப்பிற்கு பின்பு தான் உயில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மகன் இறந்தபின்பு மருமகளின் வற்புறுத்தலின் பேரில் தான் உயில் எழுதப்பட்டது என்றால் தெரியாது. அவர் உண்மையிலேயே உயில் எழுதியிருந்தால் மனைவிக்கு எழுதியிருப்பார் என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. ஆத்திக்கு 4 மகள்கள் என்றால் சரிதான். அதில் செல்வா என்பவரின் கணவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் படிக்கவில்லை. கையெழுத்து போடுவேனா என்றால் போடுவேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் பி.வாசா.ஆ.6 ல் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து இல்லை என்றால் சரியல்ல. அது என்னுடைய கையெழுத்துதான் நான் உயில் எழுதும் போது செல்லவில்லை என்றாலும் கையெழுத்து எதுவும் போடவில்லை என்றாலும் சரியல்ல. முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல.

**O.S.No.115/2020 நாள் 11.06.2026 DW 2 – திரு.முருகேசன்**

(சாட்சி மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.)

**குறுக்குவிசாரணை(வாதி தரப்பில்)**

உயில் எழுதுவதற்கு யார்யாரெல்லாம் சென்றோம் என்றால் ஆத்தி, சோரீஸ் மற்றும் நான் சென்றோம். ஆத்தியின் மனைவி பெயர் என்னவென்றால் ஆழ்வார். ஆழ்வாரம்மாவும் ஆத்தியும் உயில் எழுதியதாக சொல்லும் காலக்கட்டத்தில் அவரது மகன் வீட்டில் தான் இருந்தார்கள் என்றால் சரிதான். எந்தெந்த சொத்திற்கு உயில் எழுதப்பட்டிருக்கிறது என்று தெரியுமா என்றால் தெரியாது. உயிலை நான் வாசித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். உயில் என்ன நோக்கத்திற்காக எழுதப்பட்டது என்று தெரியுமா என்றால் மகன் இறந்துவிட்டதால் பேரனுக்கு சொத்து கொடுக்க வேண்டும் என்று எழுதினார். ஆத்தி, ஆழ்வார்க்கு ஒரே மகன் என்றால் சரிதான். ஆழ்வாரம்மாவை பராமரிக்கவேண்டிய கடமை மகனின் வாரிசுக்கும் உள்ளது என்றால் பேரன் தான் பார்த்து வருகிறார். தற்போது ஆழ்வாரம்மாள் யாருடன் இருக்கிறார் என்றால் அவரது வீட்டில் பேரனுடன் இருக்கிறார். ஆழ்வாரம்மாளின் மகள்கள் நீதிமன்றத்தில் அவர்களது பராமரிப்பில் தான் ஆழ்வாரம்மாள் இருப்பதாக கூறியுள்ளது பற்றி தெரியுமா என்றால் ஆழ்வாரம்மாள் அவரது மகள்கள் வீட்டிற்கு சென்று வருவது எனக்கு தெரியாது. உயிலில் நான் சாட்சியாக கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றாலும் அதில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. உயிலை தயார் செய்தது யார் என்று தெரியாது என்றால் தெரியும். கனகசுந்தரம் தயார் செய்தார். தயார் செய்து வைக்கப்பட்டிருந்த உயிலில் தான் நான் கையொப்பம் இட்டேன் என்றால் சரிதான். ஆத்தி தனது மனைவியான ஆழ்வாரம்மாளுக்கு ஏதாவது ஏற்பாடு செய்துள்ளாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பெரியராஜின் அம்மாவின் தூண்டுதல் மற்றும் வற்புறுத்தலின் பேரில் ஆத்தி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்தார் என்றால் சரியல்ல. அவர் உண்மையிலேயே

மனமுவந்து உயில் எழுதி வைத்திருந்தால் தனது மனைவிக்கு ஏதாவது ஏற்பாடு செய்து வைத்திருப்பார் என்றால் சரியல்ல. ஆத்தி எனக்கு என்ன உறவு என்றால் மாமா. ஆத்தியின் மருமகள் எனக்கு என்ன உறவு என்றால் திருமணத்திற்கு பிறகு தங்கை உறவு வேண்டும். ஆத்தி எனக்கு மாமா உறவு என்பதால் அவர் எழுதி வைத்த உயில் சரியாக இருக்கும் என்றும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் முன்னிலையில் ஆத்தி கையெழுத்து எதுவும் செய்யவில்லை என்றாலும் நான் ஆத்தி முன்னிலையில் கையெழுத்து செய்யவில்லை என்றாலும் சரியல்ல. சோரீஸ் உயிரோடு உள்ளரா இல்லையா என்று எனக்கு தெரியாது என்றால் அவர் இறந்துவிட்டார் அதற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் தெரியாது. அவர் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேனா என்றால் அவருக்கு வயக்காடு உள்ளது எனக்கு நன்கு தெரியும். சோரீஸ் என்பவர் யார் என்றே எனக்கு தெரியாது என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உயிலை பற்றி எதுவும் தெரியாது என்றாலும் சாட்சியாக கையெழுத்து செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.
மறுவிசாரணை இல்லை.